பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

இஃது

எந்த நாளிலும் ஓதும் துஆக்களுடன் பஞ்சம், பிளேக்,
இன்புளுயன்ஸா விஷஜுரம், வபாமுதலிய ஆபாத்துகள்நீங்க
ஹக்தஆலாவினிடம் இரந்து கெஞ்சிக் கேட்கும்

# அஹ்ஸனுல் முனாஜாத்
# விதப்இ
# குல்லில் பலிய்யாத்.

இஃது

மதராஸ் இலாகா, வாலாஜா தாலூக்காவைச் சேர்ந்த

**மேல்விஷாரம்**

**கடைக்கார - அப்துல்கனீ சாகிபவர்கள் குமாரர்**

**(அஹ்ஸன்)**

**க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்களால்**

கோர்வை செய்யப்பெற்று ஷை யாரால்

ஷை கிதாபுடைய காபிரைட் ஹக்கைப் பெற்றுக்கொண்ட

மேல்விஷாரம்

வாயிஸ்—மா. அப்துல் றஜாக் சாகிபு அவர்களால்

ஆம்பூர் ஆலிஜனாப்

**வி. ஜைனுல் ஆபிதீன் சாகிபு**

அவர்கள் பொருளுதவியின் முயற்சியைக்கொண்டு


மதராஸ் பி. ஆர். ராம அய்யர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

15—1—1926

திருத்தமாகிய இரண்டாம் பதிப்பு காப்பி 2000

ஹிஜுறத்து 1343-ம் ஆண்டு றஜபுமீ



ரிஜிஸ்தர் காபிரைட்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 15 FEB 1926

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இந்த அஹ்ஸனுல் முனுஜாத் லிதப்இ குல்லில் பலிய்யாத் தென்னும் புத்தகத்தைக் கோர்வைச் செய்தச்சிட்ட மேல்விஷாரம் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்களால் கவர்ன் மெண்டு புக் ரிஜிஸ்தாரார் சட்டப்படிக்கு ரிஜிஸ்தர் காபிரைட் செய்திருப்பதால் ஷை க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்களால் ஷை புத்தக காபிரைட் ஹக்கை கிரயம் பெற்றுக்கொண்ட மேல் விஷாரம் மா. வாயிஸ்—அப்துல் றஜாக் சாகிபுடைய அநுமதியின்றி அச்சிடும், அச்சுக்கூடத் தலைவர்களும், புத்தக வியாபாரிகளும், கனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்களால் ஏற்படுத்தப் பட்ட புக் ரிஜிஸ்தாரார் சட்டப்படிக்கு கோரும் நஷ்டத்துக்கும் செஷன் குற்றத்துக்கும் உட்படுவார்களென்பதை இதனுல் தெரி விக்கப்பட்டது.—

இங்ஙனம்,

மா. ம. அப்துல் றஜாக் சாகிபு.

121072

---

## இஅலான்.

இகுவானகளே! இந்த றிஸாலாவைக் கோர்வைச்செய்த காரணம் முகவுரையைப் படித்துப்பார்க்க நன்கு விளங்கும். இதில் ஆயாத்துகள், அஹாதீசுகள், பொதிந்திருப்பதால் தமிழ் கிதாபு தானே என்று கவனிக்காமல் மருங்குடன் வைக்கவேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் நேரில் அல்லது வி. பி. யில் தருவித்துக் கொள்ளலாம்.

விலாசம் :

வாயிஸ் - மா. அப்துல் றஜாக் சாகிபு,

மேல்விஷாரம் போஸ்டு,

(நார்த்தாற்காடு).

O7
N26

பிஸ்மில்லாஹி.

# விளம்பரம்.

இந்த விளம்பரத்தில் குறித்துள்ள கிதாபுகளி லடங்கியிருக்கும் இகபரத்துக்குரிய விஷயங்களை அறபீ, பார்ஸீ, ஹிந்தீ, பாஷைகளி லிருந்து மொழிப் பெயர்த்து றஹ்மானுதவியால் அச்சிட்ட இந்த அறிய நூல்களைத் தமிழிலும் அறபுத் தமிழிலும் அச்சியற்றப்பட்டு, வெளிவந்ததும், நமது ஹிந்து தேசத்தில் வசிக்கும் முஸ்லிம் பிறவி களுக்கோர் நல்பாக்கியமென படித்து வருகையில் தோற்றும்.

## 1-வது அஹ்றவஸனுன் னஜாத்.

இந்த கிதாபு டிம்மி சைசில் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப் பட்டு ஆப்பைண்டு செய்த

கிதாபு 1-க்கு ரூ. **1—0—0** வி. பி. யில் ரூ. 1—3—0

## 2-வது தன்பீஹுல் அனும் பீ துஹ்பத்தில் அவாம் இரண்டு பாகமும்.

இந்த இரண்டு பாகங்களும் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப் பட்டு ஆப்பைண்டு செய்த

கிதாபு 1-க்கு ரூ. **1—4—0** வி. பி. யில் ரூ. 1—8—0

## 3-வது நஸீஹத்துல் அனும் பீ ஹிதாயத்தில் இஸ்லாம் இரண்டு பாகமும்.

இந்த இரண்டு பாகங்களும் ஆப்பைண்டு செய்த கிதாபு 1-க்கு விலை ரூ. **0—8—0** வி. பி. யில் ரூ. 0—12—0

## 4-வது அஹ்காமுல் ஹிதாயா பீ அஅமாலில் பவாயிதஹ்.

இதன் விலை ஸ்டிப் பைண்டு கிதாபு 1-க்கு ரூ. **0—6—0** வி.பி. யில் ரூ. 0—9—0

## 5-தல்கீன் பீ முஹிம்மா தித்தீன் லிஅவ்லாதில் முஸ்லிமீன்.

மேற்படி ஸ்டிப்பைண்டு கிதாபு 1-க்கு ரூ. **0—8—0** வி. பி. யில் ரூ. 0—11—0

## ஐந்து வாலியம் சேர்ந்த அஹ்ஸ னுன்னஜாத்

இகுவான்களே! இதில் அகத்தியமான பிக்ஹு அகாயிதுதீனீ இல்முகளை தலீல், ஹதீஸ், றிவாயத்து, ஹிக்காயத்து, முதலியவைக ளுடன் அனந்தமனந்தம் நஸீஹத்துக்கள் உதாரணங்களுடனும் இன்னும் சக்ருத்து, மவுத்து, கபர், கியாமத்து, மஹ்ஷர், இவைக ளில் அமலுக்குத்தகுந்த சுப சுகங்களும், துக்கந் துயர்களும் ஷபா

அத்தின் சேதி ஹத்த ஆலாவின் நீதம் சுவர்க்கம், நரகம் முதலிய இன்னு மனந்தஞ் செய்திகளும் படிக்குங் கேட்கும் பிறவிகா ளின்னுஞ் சற்றே படிப்போம் கேட்போமென்னு மின்பந் தாத்தக்க 36-வித இராகங்களால் சுமார் 6500 பாடல்களமைந்தும் சுமார் 680 பக்கங் கொண்டது. இதில் சுமார் 80 பக்கங்களில் சிற்சில பிக்ஹு மசாயல்களை மட்டும் ஹலறத்து இமாம் அபூஹனீபா றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கௌலின்படி ஒருவர் சுவால் கேட்பது போலும் அதற்கு மற்றொருவர் பதிற்சோல்வதுபோல் சொல்லியும், மற்ற 600 பக்கங்களில் நமது ஷங்கையாகிய முஸ்லிம் பிறவிகளில் ஹனபிய்யாக்கள், ஷாபியாக்கள், முதலிய யாபேர்களும் அகத்திய மறிந்தமல் செய்யவேண்டிய எவல்களை ஓர் வஅலுடைய கிதாபைப்போல் கோர்வைசெய்து மேலே தனிப்பிரதியாக குறித்த சுத்த தமிழ் நூதனமான 5-கிதாபுகளையும் ஒன்றாகச் சேர்த்து சீமை சிறந்த காலிகாவினால் அழகான பயிண்டு கட்டிய ஐந்து வால்யம் சேர்ந்த அஹ்ஸனுன்னஜாத் என்னும் பெயருள்ள கிதாபு 1-க்கு ரூபா **3—0—0**. வி. பி. யில் ரூபா 3—8—0.

# அறபுத் தமிழ்.

## மூன்று வாலியம் சேர்ந்த நஸீஹத்துஸ் ஸவ்ஜைன்.

பெண்டுகள் புருஷருடன் ஒத்து வாழவேண்டிய தன்மைகளை ராயல் பெரிய சைஜில் சுமார் 282 பக்கங்களடங்கிய (அறபுத்தமிழ்) (மூன்று கிதாபுகள் சேர்ந்த நஸீஹத்துஸ் ஸவ்ஜைன்) என்னுங் கிதாபில் பேண் பிறவிகளுக்கு வேண்டிய முக்கியமான நல்மாராயங்களும், உபதேசங்களும், உதாரணங்களு மாயிரக் கணக்கான பதவிகளை துனியா ஆகிரத்தில் பற்றக்கூடிய அற்புதமான சேதிகளையும், அனந்தமனந்தமான அத்தாக்ஷிகளுடன் எளிதில் விளங்கிக் கொள்ள விபரமாகவுந் தெளிவாகவும் பேசப்பட் டிருக்கின்றது. இதைபடித்தறிந்து நல் நடைக்கைகளைக் கருதும் பெண்களின் புருஷர்கள் தமது மனைவியர்கள் செய்யும் பணிவிடைகளால் பெரும்பதவிகளையும் சுபசுகங்களையும், அவர்களின் நல்லொழுங்குகளையும்பற்றி சந்தோஷங்களை யடையும் ஆண்களுக்கே தெரியும்.

மேல்கண்ட அறபுத்தமிழ் மூன்று கிதாபுகளையும் ஒன்றாகச் சேர்த்து ஆப்பயிண்டுசெய்த கிதாபு 1-க்கு ரூ. **1—12—0**. வி.பி.யில் ரூ. 2—2—0.

விருப்ப முள்ளவர்கள் கைப்பற்று மிடம்.

**வாயிஜ் மா. அ. புக்டிபோ,**

மேல்விஷாரம் போஸ்டு (நார்த்தாற்காடு.)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

# அஹ்ஸனுல் முனாஜாத் லிதப்இ குல்லில் பலிய்யாத்.

---

## முகவுரை.

ஆலமனைத்தும் படைத்து அரசாட்சி செய்ய தத்துவமுள்ளவ்னும், செய்பாவங்களை நினைத்து தௌபாச்செய்து குற்றங்களை மன்னிக்கக் கேட்குமடியார்களின் துஆக்களை கபூல் செய்கிறவனும், இன்னுந் துனியாவி னுடையவும், ஆகிறத்தினுடையவும், வரிசைகளைக் கொடுத்து நம்மை நற்கரையில் சேர்க்கிறவனுமாகிய ஹக்தஆலாவினுடைய ஹம் தென்னும் புகழிப்புக்கும்.

இன்னும் உம்மத்தோர்களுக்கு நன்மைத் தின்மைகள் இன்னின்ன காரியங்களில் உண்டுமென்பதைப் பிரித்துக்காட்டியும், இம்மையிலும் மறுமையிலும் நாம் ஜெயம் பெறத்தக்க நன்மைகளைப் பற்றவும் பாவங்களை விட்டு விலகவும், பற்பலவித நல்மாராயங்களை எமக்கறிவித்தும் மஹ்ஷரில் தமதும் மத்தோர்களுக்கு மன்றுடி நற்பதியில் புகுதச் செய்யும் நமது நாயகம் றசூலே அக்றம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் பேரிலு மவர்கள் தோழமார்கள் கிளையார்கள் மீதிலும் சலவாத்தும் சலாமு முரைத்த பின்னர்.

இகுவான்களே! இந்த கடேசீ ஸமானுவில் நம்மில் சிலபல இகுவான்கள் அல்லாவுடைய ஏவல்களையும், அவனின் மஹ்பூபுநாயகம் றசூலே அக்றம் முஹம்மதுநபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய சொல் செயல்களையும் விட்டு தங்கள் இச்சைக் கொற்ற வண்ணமாக மார்க்கநெறி நீதங்களை மறந்து தங்கள் மூர்க்கம்போல் நப்ஸே அம்மாறுவினுடையதஅபே தாரிச் செய்து நமது சங்கையாகிய ஷறஅ ஷரீபில் ஆமான கருமங்களைத் தவிழ்ந்து அதில் முன்கருக்கப்பட்ட கொடிய கருமங்களைப்பற்றி நடப்பதால் தற்போது அல்லாஹ் தபாறக் தஆலாவின் புறத்திலிருந்து நேர்ந்துள்ள கஹ்றுகளிற் சிலது உலகத்தில் பரவி பற்பலவித ஆபாத்துகள் முசீபத்துகள் அடைய வளைந்து அல்லும் பகலுந் துன்பத்திற் காளாகி நாம் கஷ்டங்களில் சிக்கி பாதவித்திடுந் துயர்களாவன,

(அதாவது.)

1-வது துனியா ஆகிறத்துக்கு வேண்டிய முறை குறைகள்.
2-வது பற்பலவிதமான ஆபாத்து முசீபத்துகள்.
3-வது பஞ்சத்தின் வறுமையான கஷ்டங்கள்.
4-வது வாந்தி பேதியின் அமளிகள்.
5-வது பிளேக், இன்புளுயன்ஸா, விஷஜுரம் முதலிய கொடுமைகள்.

ஆக மேற்கூறிய ஐந்து பாராவிற் கண்ட ஆபாத்துகள், கஷ்டங்கள் நம்முடைய ஷாமதே அஅமாலினால்தான் நேரிட்டிருக்கிறது. (அதாவது) அனந்தம் பேர்கள் துனியாவுடைய வலையிற் சிக்கி ஆகிறத்தை அறவே மறந்து தங்களின் அருமையான வாணாளை வீணிலே துலைத்து முன்னோர்கள் வாக்கியம்போல் (அதாவது.)

பதம் இராகம்—துள்ளற்றோடி, ஆதிதாளம்.

ஆணென்றும் பெண்ணென்று மமைத்திட்ட வல்லானை
யவனும் ஷுக்குர்செய்யா திருக்கிறான் — இன்னும்

ஜாணெட்டு தன்னிட மென்றறி யாமலே
ஜகமனைத்து மென்ன தென்கிறான் — என்று

மாண்டோரைக் கண்ணாலே கண்டுமே மாபாவி
மாயப் புவியினை நம்புறான் — நம்பி

மண்ணாசைப் பெண்ணாசைப் பொன்னாசை என்றவன்
மவுத்தையே தான்மறந் திருக்கிறான். — இந்த

வையகந் தனிலுள்ள வாதாடி களைக்கண்டு
வழிதப்பிப் போகாதே நெஞ்சமே.

என்னும் வாக்கியம்போல் மண்ணாசை, பேண்ணாசை, பொன்னாசை, என்னுமிந்த மூவாசையால் மயங்கி தற்போதுள்ள உலகத்தின் சுகங்களை உத்தேசித்து பிற்போதுள்ள அபதுல் ஆபாதென்னுமென்று மழியாத சுவர்க்க லோகத்தின் நிஅமத்துகளை யிழந்து கல்குகளுடைய முஹப்பத்தாலே காலிகை மறந்து தம்தமது மவுத்துக்குப் பின் நேரிடும் கஷ்ட நஷ்டங்களை தட்டி விலக்கும்படியான நன்றிகளை முற்படுத்தாமலும் கொடிய கருமங்களில் மூழ்கிய காரணங்களாலேயே மேற்கண்ட பற்பலவித ஆபாத்து முசீபத்துகள் ஹக்தஆலாவின் புறத்திலிருந்து வந்த கஹ்றாக இருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

ஆகையால் மேற்கண்ட ஆபாத்து முசீபத்துகளை முஸ்லிமாகிய ஒவ்வொரு பாயிமார்கள் தாய்மார்களும் கூர்மையாக நோட்டஞ் செய்து மேற்கூறிய முன்கறான கருமங்களைத் தட்டி விலகியும், ஷைத்தான் அலைஹில்ல அனத்துடைய மக்றுகளில் சிக்காமலும்,

அழியுந் துனியாவின் அவேள்க்கைகளைப் பின்புறமாக வீசியும், அல்லாஹ் றசூலுடைய ஏவல்களென்னும் ஷறஅ ஷறீபுடைய கட்டுப் பாட்டுக் கடங்கியும், தங்கள் தங்கள் நபசுகளுக்காக வேண்டிய கைரான கருமங்களை முற்படுத்தியும், துனியா ஆகிறத்துடைய சுக சம்பத்துகளைக் கைப்பற்ற வேணுமானால் அவரவர்கள் தம் தமது குற்றங்களை கவனித்து (அற்ஹமுற் ராஹிமீன்) கிருபைச் செய்யப் பட்டவர்களில் மிகுந்த கிருபைச் செய்கிறவனாகிய ரஹ்மானிடத்தில் சாளையப்பட் டழுது கெஞ்சி கலப்பருதலான தௌபாவைச் செய்து அவரவர்கள் குறை முறைகளைக் கேட்கவேண்டிய தவசியமா யிருக் கிறது.

ஏனென்றால் இன்சான் மறதியுள்ளவன், தவறுதலுள்ளவன், இவனால் நேரிடுங் குற்றங்கள் கணக்கிலடங்காதவைகளாக இருப்ப தால் அவைகளைக் குறித்து மன்னிக்கக் கேட்டால் ஹக்தஆலா அவ னினடியார்களின் பாவங்களை மன்னித்துப் பொறுத்துக் கொள்வா னென்றும் அந்த அடியான் பாவமில்லாதவனைப்போல் துப்புற வாகிறானென்றும் அனந்தம் ஆயாத்துகள், அஹாதீசுகள், வந்திருக் கிறது. (அதாவது) அல்லாஹுத் தஆலா திருவுளம் பற்றினான்.

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ

اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ۝

என் அடியார்களுக்கு நான் சொல்லுகிறதாய் சொல்லும் தங்களுடைய நப்சுகளின்பேரில் கடப்புசெய்த (யஅனே பாவம்செய்த) என்னு டைய அடியார்களே, அல்லாவுடைய ரஹ்மத்தைவிட்டும் நீங்கள் நத் துதல் கெடவேண்டாம் (யஅனே ஆதரவற்றுப் போகவேண்டாம்) திடனாக அல்லாஹுத்த ஆலா வாகிறவன் பாவங்க ளடங்கலையும் பொறுப்பான், திடனாக அவனாகிறவன் பிழைபொறுத்துக் கிருபைச் செய்கிறவனாக இருக்கும்.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளம் பற்றினான்

اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ ۝

திடனாக அல்லாஹுத் தஆலாவாகிறவன் பாவத்தைவிட்டும் தௌபாச் செய்தவர்களை உகப்பான். இன்னும் அசுத்தத்தைவிட் டும் சுத்தமா யிருந்த வர்களையும் உகப்பான்.

இன்னும் ஹதீசே ஷரீபில் வந்திருக்கிறது.

اَلتَّائِبُ مِنَ الذَّنْبِ كَمَنْ لَا ذَنْبَ لَهُ ۝

பாவத்தைவிட்டும் தௌபாச் செய்கிறவன் பாவமில்லாதவனைப் போலாகிவிடுகிறு னென்று நபீசல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம் பற்றினுர்கள்.

இன்னும் ஹதீசே ஷரீபில் வந்திருக்கிறது.

يَا أَيُّهَا النَّاسُ تُوبُوا إِلَى اللّٰهِ فَإِنِّي أَتُوبُ إِلَيْهِ فِي الْيَوْمِ مِائَةَ مَرَّةٍ ۝

ஓ மனிதர்களே! நீங்கள் அல்லாஅளவில் தௌபாச்செய்யுங்கள், திட்டமாக நானவன ளவில் நாளோன்றுக்கு நூறுவிடுத்தம் தௌபாச் செய்கிறேனென்று நபீசல் லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம் பற்றினுர்கள்.

இதுபோலனந்தம் ஆயாத்துகள், அஹாதீசுகள், வந்திருக்கின் றன. அவைகளை எழுதினுல் விரிவாகு மெனக் கருதி சுட்டிக் காட் டப்பட்டது. ஆகையால் முஸ்லிம் பிறவிக ளொவ்வொருவருக்கும் துனியா ஆகிறத்துக்கு வேண்டிய நல்மாராயங்களைப் பற்றியும், உல கத்தில் நேர்ந்துள்ள பற்பலவித ஆபாத்து முசீபத்துகள் விலக வேண்டியதைப் பற்றியும் முஸ்லீமாகிய ஆண், பெண், பெரியோர், சிறியோர் முதலியயா பேர்களும் படிக்கவும் மனப்பாடஞ் செய்ப வர்களுக்கு இலேசாகவும் அழகிய பைத்துகளாகவும் இந்த றிஸாலா வைக் கோர்வைச் செய்து இதற்கு (அஹ்ஸனுல்முனுஜாத் லிதப்இ ரூல்லில்பலிய்யாத்) என்னும் பெயர் கொடுத்து தீனிப் பிறவிகள் சமு கத்தில் முற்படுத்தப் பட்டது.

இதனை தீனிப்பிறவிகள் யாபேர்களும் ஓதி இருபதியிலும் சலாமத்தியைப் பெற ஹக்தஆலா நல்லுதவி செய்வானுக :—

ஆமீன் தும்ம ஆமீன்.

றப்பனுஸலம்னு அன்புஸனு வஇன்லம்தக்பிர்லனு வதர்ஹம்னு லனகூனன்ன மினல்காஸிரீன். யாஅற்ஹமற்ராஹிமீன், வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

# அஹ்ஸனுல் முனாஜாத்

# விதப்சி

# குல்லில் பலிய்யாத்.

## துஆவின் துவக்கம்.

### எந்த நேரமும் ஓதும்முனாஜாத்.

ஸல்லியன்னவ ஸல்லிமன்னவ பாரிகன்னவ றஹ்மத
அலன்னபிய்யி வஆலிஹியா றப்பிஎங்கள் இலாஹனா. (1)

ஆதியானவன் ஹாதியானவன் நீதியாகிய நெடியவன்
காதிராகிய குல்ஹுவல்லாஹு அஹது எங்கள் இலாஹனா. (2)

எப்பொருளிலும் மெய்ப்பொருளாகி ஏதும்தேவைக ளற்றவன்
ஒப்புவமைக ளற்றஅல்லாஹுஸ் ஸமதுஎங்கள் இலாஹனா. (3)

அவ்வலாகிர் லாஹிர்பாதினில் ஆலவ்லாதீன்றி டாதவன்
மவ்லாவேறப்பல் ஆலமீனேலம் யலித்எங்கள் இலாஹனா. (4)

அரூபியாகநீ தனித்ததன்றியே யாருமுன்னைப் பெறாதவன்
சொரூபியாகிய துய்யவாவலம் யூலத்எங்கள் இலாஹனா. (5)

உண்மையாகவே உனக்குசரியொற்ற ஒருவருமே யில்லாதவன்
வண்மையாகிய வலம்யகுன்லஹு குபுவன்அஹது இலாஹனா. (6)

சொந்தமானஉன் திருவசனமாம் சூறத்இக்லாஸின் மகிமையால்
உந்தன்தர்பாரில் கேட்பதைகபூல் உகப்புடன்செய் யிலாஹனா. (7)

பங்கமாகிய பாவங்கள்செய்த பாவிகள்நாங்க ளாகிலும்
எங்களல்லோரை காக்கநீயல்லால் எவருமில்லை இலாஹனா. (8)

நாங்களறிந்தறி யாமற்செய்பிழை யாகினும்மலை போலவே
ஓங்கினுமதைப் பொறுத்துதீனுக்கு உதவிசெய் யாஇலாஹனு. (9)

வின்னத்தீங்குகள் எங்கள்தீன்பேரில் வீணில்வந்தணு காமலே
உன்னைக்கெஞ்சியே கேட்கிறோம்நாங்கள் உம்மத்தோர்
[யாஇலாஹனு. (10)

அருமையாகிய எங்கள்தீனுக்கு ஆபத்தெப்போது மணுகிடா
ஒருமையாகவே காத்துத்தீன்பயி ரோங்கச்செய் யாஇலாஹனு. (11)

தீன்நிலைத்திட பாடுபட்டவர் கியாபகம்எம்மி லிருக்கவே
தீனேஅஹ்மதீ யாவினேவலை திட்டமாய்கார் இலாஹனு. (12)

பக்கலெண்டிசை வாழுமுமின் முஸ்லிமானவர் யாவரும்
ஹக்குபாதிலை யறிந்துணர்ந்திட ஆவல்கொடு யாஇலாஹனு. (13)

எங்கள்தீன் அதிகாரமானது இன்பமாய்விர்த்தி யாகும்போல்
தங்குதடையின்றி முடிவுநாள்வரை தரிபடச்செய் யிலாஹனு. (14)

பற்பலவித துன்பங்கள்துயர் பாரிலெங்கள்மேல் படர்ந்ததால்
குல்பலாய்நீக்கி உன்னடியாரை குதரத்தால்கார் இலாஹனு. (15)

நலவதாகிய அமலிலேஎம் ஹயாத்தைநீளமு மாக்கியே
நல்லுதவிகள் செய்துமெங்களை நாளுங்கார்யா இலாஹனு. (16)

வண்மையானஉன் வலுப்பந்தங்கிய வரிசையாகிய றஹ்மத்தால்
மண்ணில்நாங்கள்செய் பாவமானதை மன்னித்துக்கார் இலாஹனு ()

எங்கள்கல்பினுள் பொதிந்தபாவத்தின் ஈனமாம்பிணி யகற்றியே
சங்கையாளர்கள் கூட்டத்திலெம்மை சார்ந்திருக்கச் செய்
[லாஹனு. (18)

நாங்கள்முஸ்லிங்கள் நாடிகேள்துஆ நாயனேஉந்தன் கிருபையால்
தாங்கிவற்றுஎம் நெஞ்சத்திலீமான் தரிபடச்செய் யிலாஹனு. (19)

அஞ்சுநேரமும் நெஞ்சந்துலங்கிட அடியர்கள்உனை ஆவலாய்
வஞ்சகமில்லாவாணுல்மட்டிலும் வணங்கச்செய்யா யிலாஹனு (20)

கடமையாகிய நோன்பும்ஸக்காத்தும் கஅபத்துல்லாவின் ஹஜ்ஜையும்
அடவுடன் நிறை வேற்றவேசெய்து ஆதரியா இலாஹனு. (21)

ஷிறுக்கெனுங்கொடுஞ் செயலகற்றியே சிந்தையில்மிக திடுக்கமாய்
தறுக்ணன்இபு லீற்சிக்காமல் தாயமாய்கார் இலாஹனு. (22)

எமக்குநேரிடு மவுத்தின் ஹாலில்ஈ மானுடன்கரை சேரவே
அமனேதந்துநீ அவ்வலாகிரில் ஆதரித்திடு லாஹனு. (23)

புல்சிறுத்தெனும் பாலந்தாண்டியே பூரிப்பாகவே முஸ்லிங்கள்
நல்பதீபுக தௌபீகைதந்து நாளுங்கார்யா இலாஹனு. (24)

உன்லிகாவையாம் சந்திக்கச்செய்து உள்ளம்பொங்கி யானந்தமாய்
ஏன்றும் சந்தோஷம் பெறவேதௌபீகை எமக்குசெய்யா இலா
[ஹனு. (25)

உன்னடியார் உகந்துகேட்பதை உன்ஹபீபவர் பொருட்டினுல்
முன்கபூல்செய்து அஹ்ஸனுக்கியே முற்றுங்கார் யாயிலாஹனு(26)

## அறபி வாக்கியம்.

றப்பனு தகப்பல்மின்னு இன்னக அன்தஸ்ஸமீஉல் அலீம் வதுப்அலேனு இன்னக அன்தத்தவ்வா புற்ரஹீம். பிறஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.

---

## உலகில் நமக்கு சலாமதீயைநாடி கேட்கும் முனஜாத்.

### தாலாட்டு இராகம்.

ஆதிப் பெரியவனு யனைத்தும் படைத்தவனுய்
சோதித் திருவொளிவாய்த் துலங்கிடும் றஹ்மானே. (1)

நல்லார் பொல்லாரெவர்க்கும் நற்கிருபை செய்யுமெங்கள்
வல்லா னுனைப்புகழ்ந்து வாழத்தினம் றஹ்மானே. (2)

நாதர் நபீபேரில் நல்சலவாத் தோதியபின்
நீதத் தோழர்மேல்சலாம் நிகழ்த்தினம் றஹ்மானே. (3)

உலகில் எமைபடைத்தா யுன்னை வணங்குதற்காய்
நலமாம் வணக்கத்திலே நாட்டிவைப்பாய் றஹ்மானே. (4)

அழியும் வாழ்வென்றறியா அஞ்சாது மிஞ்சியேநாம்
பழிபாவஞ் செய்ததெல்லாம் பொறுத்திடு றஹ்மானே. (5)

ஆதம் நபீபிசகை நீதம்மாய் நீபொறுத்து
தீதகற்றும் போலெங்கள் தீங்ககற்று றஹ்மானே. (6)

தூபானில் நபீநூஹை துய்தாய்நீ மீளவைத்து
காப்பாற்றும் போலஎம்மைக் காத்துக்கொள் றஹ்மானே. (7)

மூசாவை நீலாற்றில் மோசமொன்றும் வாராமல்
ஆசானுய் காத்தாப்போல் அடியரைக்கார் றஹ்மானே. (8)

சதுர்வானில் ஈசாவை சங்கையாய் நீஏந்தி
பதுமையாய் காத்தாப் போல் பணப்பாய்கார் றஹ்மானே. (9)

கிணற்றில் யூசுப்நபிக்கி கெடுதிக ளணுகாமல்
இணக்கமாய் காத்தாப்போ லெம்மைக்கார் றஹ்மானே. (10)

இபுறூஹீம் நன்னபியை எரிகுண்டத்தில் அமனுய்
சபுரீந்து காத்ததுபோல் சார்ந்தெமைக்கார் றஹ்மானே. (11)

மச்சத்தின் வயிற்றுக்குள்ளே மன்னர்நபீ யூனுசுவை
இரட்சித்து காத்தாப்போல் இரட்சிப்பாய் றஹ்மானே. (12)

ஆதுவின் கௌமிடர்கள் அணுகா நபீசாலீஹை
நீதமாய் காத்ததுபோல் நீகாப்பாய் றஹ்மானே. (13)

அபூஜஹ் விடர்பலதை அணுகாஎம் அஹ்மதரை
தபுறாக்காய் காத்ததுபோல் தகுமாய்கார் றஹ்மானே. (14)

கஅபாவை இடிக்கவந்த * கரிகலகந் தட்டளித்து
கஅபாவைக் காத்ததுபோல் காருலகை றஹ்மானே. (15)

செய்பாவங்கள் நினைத்து சிந்தையிலே நொந்துருகி
அய்தமாய் கெஞ்சுதலை யாதரிப்பாய் றஹ்மானே. (16)

---

* கரிகலகம் என்பது, யானைக்கலகம்,

அறியா தறிந்தும்பிழை தெரியாம லிவ்வடியர்
நெறிதப்பிச் செய்ததெல்லாம் நீபொறுப்பாய் றஹ்மானே. (17)

எங்கள்தீன் இசுலாமை ஏற்றஉன் கிருபையினுல்
சங்கை சலாமத்துடன் சருகாகார் றஹ்மானே. (18)

தீனுக்கு எப்போதுந் தீங்கொன்று மணுகாமல்
மானுக்குப் பிணையானோர் மருங்கால்கார் றஹ்மானே. (19)

சருகாம லுன்னேவல் சங்கைநபீ தம்மேவல்
ஒருகாலும் யாம்தவரு உதவிசெய் றஹ்மானே. (20)

இசுலா மொழுக்கங்களை பிசகா தெடுத்து நாங்கள்
விசுவாச மாய்நடக்க விருப்பஞ்செய் றஹ்மானே. (21)

தவ்ஹீது கலிமாவை தவரும லென்நாளும்
அவ்ருது போலோத ஆவல்கொடு றஹ்மானே. (22)

அல்பகல்லா யிலாஹ இல்லல்லாஹ் வென்றதிகீர்
நல்நாவி லூசாட நாட்டமீ றஹ்மானே. (23)

விதித்த ஐவேளைத் தொழ விருப்பத்தை எம்மில்தந்து
பதிசொர்க்கத்தில்புகுத பஜல்செய்நீ றஹ்மானே. (24)

ஸக்காத்து நோன்புஹஜ்ஜுடும் சருகாமல் யாமெடுக்க
எக்காலு முதவிசெய்து ஈடேற்று றஹ்மானே. (25)

மூச்சுள்ள மட்டுமெம்மில் ஏச்சுக்கிட மில்லாமல்
பாச்சுமுன் றஹ்மத்பெரும் பாதைகாட்டு றஹ்மானே. (26)

அல்பக லெம்மனதினில் நல்நாட்டம் நீகொடுத்து
நல்பே ரெடுக்கச்செய்து நலமாய்கார் றஹ்மானே. (27)

நல்லோருடன் கலந்து நல்அமலைச் செய்வதல்லாற்
பொல்லோர் பழக்கம்விட்டு பூமியில்கார் றஹ்மானே. (28)

ஆணுடன் பெண்மக்களை வேணுமட்டும் நீகொடுத்து
காணும்நல் அமல்செய்யக் காட்டிவைப்பாய் றஹ்மானே. (29)

மக்களை நீகொடுத்தால் தக்கஅமல் பற்றநல்லா
துக்கம் அணுகாமல் துய்தாய்க்கார் றஹ்மானே. (30)

கடன்பட்ட தொல்லையதின் கஷ்டம்போ லொன்றுமில்லா
திடநெஞ்சில் வாட்டுங்கடன் தீர்த்தருள்வாய் றஹ்மானே. (31)

உலகில்யாம் செய்வினையால் உற்றபல துன்பந்துயர்
இலவம் பஞ்சாய்ப்பறக்க எளிதாய்ச்செய் றஹ்மானே. (32)

எண்ஜா ணுடலுக்குள்ளே இடர்துன்பந் துயரளிக்கும்
கண்டபல் பிணியணுகா காத்துக்கொள் றஹ்மானே. (33)

நாள்கள் பலநாளும் நலிந்து மெலிந்திடாமல்
தாழ்மையின் நோய்விடாமல் வாழ்வைக்கொடு றஹ்மானே. (34)

பழிப்பான நோயைவிடா பாரிலுந்தன் றஹ்மத்தினைய்
எளிதாகவிட்டுசபர் எமக்குக்கொடு றஹ்மானே. (35)

மண்ணாசைப் பெண்ணாசைப் பொன்னாசை என்றுலகில்
எண்ணும லுன்னாசை எமக்குத்தா றஹ்மானே. (36)

ஆமீன்ஆமீனல்லாஹ் அஹ்ஸன் அமல்செய்யும்
மூமின்கள் மஜ்லீசில் முடுகச்செய் றஹ்மானே. (37)

## அறபி வாக்கியம்.

றப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிறதி ஹஸன தன் வகினா அதாபன்னார். பிறஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.

# ஆகிறத்தில் நமக்கு சலாமதியைநாடி கேட்கும் முனாஜாத்.

121072

## தாலாட்டு இராகம்.

அல்லாஹூ உன்னளவில் அடியர்கள் கெஞ்சுதலை
நல்விதம் ஏற்பாயென்று நம்பினோம் றஹ்மானே. (1)

நயமாயுலகில்காக்கும் நாயகனே ஆகிறத்தின்
பயணத்தின் வேளையிலும் பாதுகாப்பாய் றஹ்மானே. (2)

அடுமைக ளெங்களுக்கு அடுத்திடில் மவுத்துடநாள்
கடிஷான நோயைவிடா காத்துக்கொள் ரஹ்மானே. (3)

உன்வணக் கத்தில்குறை யொருபோது மணுகிடாநோய்
அன்பாக விட்டுன்புறம் அழைக்கச்செய் றஹ்மானே. (4)

சக்றாத்து வேளையதில் சதிகாரன் இபுலீசின்
மக்றுக ளணுகாமல் மருங்காய்கார் றஹ்மானே. (5)

மலக்குல் மவுத்து றூஹை பற்றவரும் நேரமப்போ
கலக்கங்க ளாகாமல் காக்கவேணும் றஹ்மானே. (6)

ஒடுங்கி உயிர்போம்போ துன்னாமம் அல்லாஹூ
தடுமாறி டாஒதத் தந்தருள்வாய் றஹ்மானே. (7)

மூமின்க ளில்பிறந்து ஈமானுடன் இறந்த
காமில்கள் தவ்ஹீதை கருத்தில்கொடு றஹ்மானே. (8)

வாசஞ்செய் கட்டைவிட்டு வழங்குமுயிர் நீங்கையிலுன்
நேசத்தால் மூச்சொடுங்கும் நேர்மைக்கொடு ரஹ்மானே. (9)

உற்றா ருறவினர்கள் ஓலமிட்ட மூகையிலே
குற்ற மற்றார்சிரிப்பைக் கொடுத்தெமைக்கார் றஹ்மானே. (10)

மரித்தபின் எம்மில்வரும் வான்புவியின் சப்தங்களால்
பரிதாபம் யாமடையா பாதுகார் றஹ்மானே. (11)

Q7 N26

இடுக்கங் கபுரறையில் திடுக்கங்க ளணுகாமல்
படுக்கையிற் பதாமற் பண்பொடுகார் ரஹ்மானே. (12)

இரண்டு மலக்குநகிர் முன்கர்வந்து கேட்கையிலே
மிரளாமல் பதில்கொடுக்கும் மேன்மைக்கொடு ரஹ்மானே. (13)

நெடுந்தூக்கம் நாளதுகள் நிமிஷம்போ லகன்றுவிட
அடியற்கிரங்கி யந்நாள் ஆதரிப்பாய் றஹ்மானே. (14)

மஹ்ஷற் கெழுப்பயிலே முகத்தில் ஒளிவிலங்க
உகப்பாளர் மஜ்லீசில் ஒதுங்கச்செய் றஹ்மானே. (15)

ஈமானு டன்சென்ற சீமான்க ளோடு எம்மை
ஆமாக வேசேர்த்து ஆதரிப்பாய் றஹ்மானே. (16)

உலையிட்ட செம்பைப்போ லுருகும் மஹ்ஷர்சூட்டில்
நிலைநிற்கா அழுகையிலே நீகாப்பாய் றஹ்மானே. (17)

சூரியன் சூட்டாலே சோர்ந்துமனு துடிக்கையிலே
நேரா மறுஷின்கீழ் நிறுத்தாட்டு றஹ்மானே. (18)

பெற்ரு ருற்ருரெவரும் பேருலகி லுதகிடும்போல்
நற்ருசை யற்றநாளில் நலஞ்செய்வாய் றஹ்மானே. (19)

நன்மை தின்மைநிறுக்கும் நல்மீஸான் தட்டிலெங்கள்
நன்மை கனக்கச்செய்து நலமாய்க்கார் றஹ்மானே. (20)

உயர்பால மேறிச்செல்ல உன்னேவ லாகையிலே
துயரற்று யாம்கடக்க துணைசெய்வாய் றஹ்மானே. (21)

எட்டு சுவனத்திலே ஏற்றப்பதி பிர்தௌசிலே
தட்டுப்பா டில்லாஎம்மை தாகிலாக்கு றஹ்மானே. (22)

என்றுந் தவனம்வரா தேற்றக் கௌதர் நீரை
அன்பாய் குடிப்பாட்டி ஆதரிப்பாய் றஹ்மானே. (23)

அஹ்மத் நபீதமக்கு மாசியா மர்யமுக்கும்
தஹனியத் சபையிலெம்மை தரிப்படச்செய் றஹ்மானே. (24)

உன்லிகா பெற்றுநாங்கள் உள்ளம்பொங்கி யானந்திக்க
நன்று ஹிதாயத்செய்ய நம்பினேம் றஹ்மானே. (25)

ஆமீனுமீனல்லாஹ் அஹ்ஸன் அமல்செய்து
காமில்க ளோடுச்சேர கருணைசெய் றஹ்மானே. (26)

றப்பனு ஆதினு பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிறதி ஹஸனதன் வகினு அதாபன்னர்.

பிறஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

---

## பஞ்சம் நீங்க கேட்கும் முனாஜாத்.

யாறப்பி ஸல்லிவ ஸல்லிமன்ன அலன்னபிய்யி வஆலிஹி
பாரினில்மழை பொழியவேசெய்து பஞ்சத்தைநீக் கிலாஹனு. (1)

உன்னடியர்யாம் செய்தபாவங்கள் உஹுதுமலையைப்போ லோங்கி [னும்
உன்கிருபையின் றஹ்மத்தால்போக்கி உலகைசெழிப்பாக்கிலாஹனு.

பஞ்சத்தாலெங்கள் நெஞ்சமானது பதறும்பாதையின் வாதையை
தஞ்சமாயுன்னில் கெஞ்சல்எற்றுநீ தவிர்த்திடுபஞ்ச மிலாஹனு. (3)

ஆலத்தில்எம்மை படைக்குமுன்னர்நீ அமைத்தஎங்களின் றிஸ்கதை
காலத்தில்தர நீயல்லாவில்லை கடும்பஞ்சம்நீக் கிலாஹனு. (4)

*எட்டுபேர்சொத் தியார்களால்வரும் இடரதாகிய பஞ்சத்தின்
முட்டுகள்பல வொழித்துமெங்களை முழுதுங்கார் யாஇலாஹனு. (5)

காடுகள்செடி பூண்டுகள்பயிர் காலிகள்ஜீவ ஜெந்துக்கள்
நாடுகள்செழித் தோங்கவேசெய்து நாளுங்கார்யா இலாஹனு. (6)

---

* எட்டுப்பேர் சொத்தியார்கள் என்பது, ஸக்காத்துவாங்க பாத்திரமான எட்டுப்பேர் சொத்தைக் கொடாதவர்கள்.

காலத்தில்நல்ல மழைபொழிந்திடா காரணத்தில்மா டாடுகள்
ஆலத்தில்படும் பாதைகள்நீக்கி அடியரைக்கார் இலாஹனு. (7)

எரிகள்குளங் குட்டைகள்நிறைய ஏற்றமழைப்பொழி யாததால்
பாரினில்பயிர் பச்சைகள்காயும் பரிதாபம்போக் கிலாஹனு. (8)

காலமாமாரி காலத்தில்நல்ல காலமழைப்பொழி யாததால்
ஆலத்தில்பஞ்சம் அடர்ந்ததைநீக்கி ஆதரிப்பா யிலாஹனு. (9)

பஞ்சத்தால்தவ சங்களின்விளை பாரிலேகுறை வானதால்
பஞ்சுபோல்நெஞ்சம் பறப்பதைநீக்கி பாதுகார்யா யிலாஹனு. (10)

ஆலத்தைபடைத் தாளும்ஹக்கனே அடியர்எங்கள்மே லிரக்கமாய்
காலத்தில்மழை பொழியவேசெய்து கடும்பஞ்சம்நீக் கிலாஹனு.(11)

அகவிலைதவ சங்களானதில் அல்பகல்நாங்கள் விசனமாய்
சுகமற்றுதுய ராவதைநீக்கிச் சுகத்தைக்கொடுயா யிலாஹனு. (12)

பாரினில்நேர்ந்த பஞ்சமானது படைத்தவாஉனது கிருபையால்
சூரியன்கண்ட பனியைப்போலவே சோர்ந்துபோகச்செய் லாஹனு.

வான்புவிகளை படைத்துஆள்கின்ற வல்லவாஎங்கள் நாயகா
உளன்றலாய்மழைப் பொழிதலால்பஞ்சம் ஒழிந்துபோகச் செய்
[யிலாஹனு. (14)

வின்னத்தீங்குகள் பஞ்சத்தாலெம்மேல் வீணில்வந்தணு காமலே
உன்னைக்கெஞ்சியே கேட்பதால்மழை ஒலிக்கச்செய் யாயிலாஹனு.()

நாயகர்நபி உம்மத்தோர்கள்மேல் நற்கிருபையை செய்துநீ
நேயமானஉன் றஹ்மத்தால்பஞ்சம் நீங்கச்செய்யா யிலாஹனு. (16)

துன்பத்தில்மிகத் துன்பமாகவே துடர்ந்தபஞ்சத்தை விலக்கியே
உன்அடியற்கு றிஸ்கைநீதந்து உதவிசெய் யாயிலாஹனு. (17)

பஞ்சம்நீங்கியே அஹ்ஸனுகவே படைத்தவாஉனை வேண்டியே
கெஞ்சல்ஏற்றுநீ பஞ்சம்நீக்கியே கிருபைசெய் யாயிலாஹனு. (18)

1A

## அறபி வாக்கியம்.

றப்பனா அன்ஸில் அலைனா மாஇததன் மினஸ்ஸமாயி தகூனுலனா ஈதன் லிஅவ்வலினா வஆகிறினா வஆயதன்மின்க வற்ஸுக்னா வஅன் தகைறுர் ருஜிகீன். பிரஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.

---

## வாந்திபேதியின் காலத்தில் கேட்கும் முனாஜாத்.

——(:)——

சல்லியன்னவ சல்லிமன்ன அலன்னபிய்யிவ ஆலிஹி
அல்லல் இல்லாமல் அடியர்எங்களை ஆதரிப்பா இலாஹனா. (1)

உலகத்தில்நாங்கள் வாழும்நாளில் வபாவென்னுங்கொடும் நோயதால்
கலகம்எங்களில் நேர்ந்திடாமலே காத்துக்கொள்யா யிலாஹனா. (2)

அல்ல லல்பகல் அடியர்கள்பேரில் ஆட்டியேவாட்டும் பேதியை
அல்லாஹு உந்தன் றஹ்மத்தால்போக்கி ஆதரிப்பா யிலாஹனா. (3)

நாங்கள்முஸ்லிங்கள் நாடிகேள்துஆ நாயனேஉன் தர்பாரிலே
தாங்கிஎற்றுநீ வாந்திபேதியை தவிர்ந்து போகச்செய் லாஹனா. (4)

வாந்திபேதியின் வாதைநீக்கிட வாழ்த்திமுஸ்லிங்கள் கைகளை
ஏந்திகேட்பதை கபுலுசெய்திட இல்லையுனையன் றிலாஹனா. (5)

நோய்களானது வந்துமெங்களை நோவினைகள்செய் யாமலே
மாய்கைவாந்தியின் பேதிநீக்கியே மகிழ்ந்திடச்செய் யிலாஹனா. (6)

எங்கள்ஊரிலே வந்தநோய்பலா எங்களில்அணு காமலே
எங்களெல்லோரை காக்கநீயல்லால் எவருமில்லை இலாஹனா. (7)

கடினமாகிய நிடுக்கமானது காலைமாலையெந் நேரமும்
அடியர்மனதினில் குடிகொள்பேதியை அகற்றிவைத்திடு லாஹனா.()

விஸ்தாரமாக எங்கள்ஊரிலே வாட்டும்வாந்தியின் பேதியை
பிஸ்மில்லாவின் பறக்கத்தைக்கொண்டு போக்கிகார்யா யிலாஹனு.

விருப்பமானஉன் அருள்தங்கிய வேதம்புறுகானின் மகிமையால்
அருமையிவ்வூரை விட்டும்பேதியை அகற்றிடுயா யிலாஹனு. (10)

காட்சிக்குங்குரு நாயகர்நபீ காதிமானவர் பொருட்டினுல்
வாட்டும்வாந்தியின் பேதிநீக்கியே வாழச்செய்யா யிலாஹனு. (11)

நூற்றின்மேலே நான்காயிரம்சின்ன நபிகளானவர் மகிமையால்
தோற்றமாய்வந்த வாந்திபேதியை தூரமாக்கு இலாஹனு. (12)

மன்னர்நபீதங்கள் தோழமார்நால்வர் மகிமையாளர்கள் பொருட்டி[னுல்
துன்பமாய்நேர்ந்த வாந்திபேதியின் தொல்லைநீக்கு இலாஹனு. (13)

எங்கள்நாயகர் குத்பேஅக்தாபு முஹையத்தீனவர் பொருட்டினுல்
எங்களில்நேர்ந்த வாந்திபேதியை எடுபடச்செய் யிலாஹனு. (14)

உலகத்தில்வந்த உன்பிரிசத்தின் அவ்லியாக்கள்தம் மகிமையால்
வலைபட்டமீன்போல் துடிக்கும்நெஞ்சத்தின் வாதையைநீக் கிலா[ஹனு. (15)

ஆலிமானவர் சாலிஹானவர் ஆவலாய்கேள்து ஆவினுல்
வாலீயாகிநீ வாந்திபேதியின் வாதைநீக்கு இலாஹனு. (16)

ஆமீனல்லாஹு அடியர்ஆஜிஸாய் அஹ்ஸனுக்கிட கெஞ்சலை
காமீலாஎந்தி வாந்திபேதியின் கஷ்டத்தைநீக் கிலாஹனு. (17)

## அறபுவாக்கியம்.

றப்பனக்ஷிப் அன்னல்அதாப இன்னு முமினூன், அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின்ஸவாலி நிஅமதிக வதஹவ்வுலி ஆபியதிக வபுஜா அதி நிக்மதிக வஜமீஅ ஸகதிக. பிரஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.

## தாஊன் இன்புளுயன்ஸா விஷஜுரம் நீங்கக் கேட்கும் முனஜாத்.

ஆதியேஉன்னைப் புகழ்ந்தடியர்கள் ஆவலாய் கெஞ்ச லேற்றுநீ
தீதில்லாஎம்மை எந்தக்காலமும் தீங்கில்லாகார் இலாஹனா. (1)

நல்நபீபேரில் சொல்லிசலவாத்தை நலிந்தஉந்தனி னடியர்கள்
வல்பிணிகளை யகற்றவேதுஆ வணங்கிகேட்கிறோம் இலாஹனா. (2)

அடியற்செய்வினை யால்விட்டகஹ் ருகிலுமுந்தன் றஹ்மத்தால்
கடியநோய்தாஊன் கஷ்டத்தைநீக்கி கார்யெம்மையா யிலாஹனா. ()

எங்கள்ஊரிலே நேர்ந்ததாஊன் என்னும்பயங்கர நோயதால்
எங்கள் நெஞ்சங்கள் துடிப்பதால்தாஊன் எடுபடச்செய் யிலாஹனா.

நேற்றைவிட்டினில் இன்றைகுளியினில் நேர்ந்ததாஊனின் அமளி [யால்
ஏற்றமானிடர் பயணத்தால்நெஞ்சம் ஏங்குதேயா யிலாஹனா. (5)

நோய்களில்மிக நோவினைத்தரும் நொம்பலத்தின்தா ஊனது
மாய்கையாகவே நீங்கிடச்செய்து மனுகளைக்கார் இலாஹனா. (6)

கொள்ளைநோய்பல துள்ளவைகளில் கொடியநோய்தாஊன் பிணிய [தின்
சள்ளையணுகாமல் காத்துஎங்களின் சஞ்சலம்நீக் கிலாஹனா. (7)

துடிதுடிப்பொடு கிடுகலங்கிடும் தொடர்ந்ததாஊனின் பிணியதை
அடியற்கிரங்குமுன் றஹ்மத்தால்போக்கி ஆதரியா யிலாஹனா. (8)

ஹக்கனு எங்கள்ஹக்கனுவென்று அடியர்ஆஜிஸா யுன்னிடம்
துக்கமாய்கெஞ்சல் ஏற்றுதாஊனை தூரமாக்கு இலாஹனா. (9)

இடக்குநோயென்று முடக்குநோயென்றும் இன்புளுயன்ஸாவி [ஞேயென்றும்
திடுக்கமெங்களில் நேர்ந்தநோய்களின் தீங்கைநீக்கு இலாஹனா. (10)

துன்பத்தில்மிகத் துன்பமாகவே துடித்துநாங்களும் பதைத்திடும்
இன்புளுயன்ஸாவின் காச்சலாகிடா எந்நாளுங்கார் இலாஹனா. (11)

இடைவிடாநெஞ்சில் துடிதுடித்திடு மின்புளூயன்ஸாவின் ஜுரமதை
நடைபெருமுந்தன் றஹ்மத்தால்போக்கி நாளுங்கார்யா யிலாஹனு.

வீணிலெங்கள்மேல் விஷஜுரமது வீசிடாமலெக் காலமும்
ஆணிமுத்தான நபிபொருட்டினல் அடியரைக்கார் இலாஹனு. (13)

கண்மணியான எங்கள்நன்னபீ காதிமானவர் பொருட்டினல்
கண்டதாஊன் இன்புளூயன்ஸாவின் கஷ்டத்தைநீக் கிலாஹனு. (14)

ஆதியேதாஉளன் இன்புளூயன்ஸாநோய் அணுகிடாஎங்கள் ஊரிலே
நீதில்லாகாத்து அஹ்ஸனுக்கியே திட்டமாய்கார் இலாஹனு. (15)

## அறபி வாக்கியம்.

அல்லாஹும்ம அஊது பிரிதாக மின்ஸகதிக வபிமுஆபாதிக மின்உகூபதிக வஅஊதுபிக மின்க லாஉஹ்ஸீ தனுஅன்அலைக அன் தகமா அத்னைத அலாநப்ஸிக. பிறஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன்.

---

## கலீபத்துல் முஸ்லிமீனவர்கள் சல்தனத்தின்
## சலாமத்தியைநாடிக் கேட்கும்

# முனஜாத்.

---

சல்லியன்னவ சல்லிமன்னஅ லன்னபிய்யி வஆலிஹி
சல்லல்லாநபீ தீனின் செங்கோலை சங்கையாகார் இலாஹனு. (1)

ஆதம்நன்னபீ தொடுத்தின்னுள்வரை ஆலத்தில்வளர்ந் தோங்கிடும்
காதங்கமழ்நபீ தீன்கலீபாவை காத்துக்கொள்யா இலாஹனு. (2)

ஆதியானவன் ஹாதியானவன் அஹதுன்வாஹிது மானவா
நீதியாயங்கோராவின் செங்கோலை நீடூழியாக் கிலாஹனு. (3)

ஆலத்தைப்படைத்தாளும் ஹக்கனே அடியர் எங்கள்மே லிரக்கமாய்
காலமும்அங்கோ ராவின்செங்கோலை காத்துக்கொள்யா யிலாஹனு

தவ்ஹீதைபற்றுங் கூட்டத்தார்கள்மேல் தனியவாறஹம்செய்து [தான்
தவ்லத்துஸ்மானி யாவின்செங்கோலே தாயமாய்கார் இலாஹனு. (5)

ஹக்கனேமக்கா மாமதீனுபக் தாதுஅகதஸ் அறபிகள்
எக்காலமும்டர்க்கி சல்தனத்பேரில் இன்புற்றிருக்கச்செய் லாஹனு.

எங்கள்கூட்டத்தில் பிரிவிணையாகா என்றுமேமன மொற்றுதான்
பங்கஞ்செயநாடும் சங்கத்திலசேரா பாதுகார்யா யிலாஹனு. (7)

வான்புவிகளை படைத்துஆள்கின்ற வல்லவா எங்கள் நாயகா
தீன்கிலாபத்தை எந்தகாலமும் திட்டமாய்கார் இலாஹனு. (8)

எங்கள்தீன்அதி காரமானது எந்தகாலமும் காலிபாய்
தங்குதடையின்றி சுல்தானவர்செங்கோல் தழைக்கசெய்யா யிலா [ஹனு. (9)

எங்களின்தலம் பைத்துல்முகத்தசை இறையவாஉனது கிருபையால்
சங்கையாகிய டர்க்கிஆள்கையில் தரிபடச்செய் யிலாஹனு. (10)

சங்கையாகிய எங்களின்கஅ பாவில்தீன்கொடி பறப்பதை
பங்கஞ்செயநாடும் பாதகர்களை பலிஹத்தாக்கு இலாஹனு. (11)

பாரினில்தீன்கி லாபத்தை நீக்க பாடுபட்டிடும் பாதகர்
சூரியன்கண்ட பனியைப்போலவே சோர்ந்திடச்செய் யிலாஹனு ()

அருமையாகிய தீனின்செங்கோலே அழிக்கநாடுவோர் மனமதை
ஒருமையாகவே திருத்தநீயல்லால் ஒருவரில்லே யிலாஹனு. (13)

நூஹூநன்னபி நேர்விரோதிமேல் நீதூபாணைவிட்டழித்தபோல்
ஆஹ்எம்தீனில் கலகஞ்செய்வோரை அழிந்துபோகச்செய் லாஹனு.

கல்மழைபினுல் லூத்துநபிகௌமை கருதியழித்திட்ட வாறுபோல்
நல்தீனுக்கிடர் செய்யும்பேர்களை நாசஞ்செய்யா யிலாஹனு. (15)

அருமைகஅபாவை இடிக்கவேவந்த ஆபிரஹான்யானை கூட்டத்தை
சிருமபாபீலால் காத்தபோல்தீனின் செங்கோலேக்கார் யிலாஹனு. ()

பக்கலெண்டிசை வாழுமூமின்முஸ்லிமாண் பெண்கள் யாவரும்
ஹக்கனேகெஞ்சல் ஏற்றுஅங்கோரா செங்கோலேக்கார் யிலாஹனு. ()

துன்பங்கள்துயர் அங்கோராபேரில் துடர்ந்திடாம லெக்காலமும்
அன்பொடுகாத்து தீனின்செங்கோலை ஆதரியா இலாஹனா. (18)

முஸ்தபாகமால் பாதுஷாநாடல் முற்றுமுபாறக் காகியே
குஸ்தும்துனியாவின் தௌலத்தைகாயம் குறைவில்லாசெய்யி
[லாஹனா. (19)

வெற்றிமேல்வெற்றி முஸ்தபாகமால் பாதுஷாபெறச்செய்துநீ
உற்றதீன்செங்கோல் விர்த்தியாகவே உதவிசெய்யா யிலாஹனா (20)

எத்திசையிலும் முஸ்தபாகமால் பாதுஷாவெற்றி பெற்றுதான்
முத்திரைப்பெற முஸ்லிம்களுன்பால் முடுகினம்பா யிலாஹனா. (21)

முஸ்தபாகமால் பாதுஷாசெங்கோல் முடிவுநாள்வரை யோங்கிட
பிஸ்மில்லாஹ்வின் பறக்கத்தைக்கொண்டு பேணிகார்யா யிலாஹனா.

அன்பியாக்களும் அவ்லியாக்களும் ஆலிம்கள்சுல ஹாக்களும்
நன்றுதீனுக்கு செய்துஆபோல நலமுடன்கார் யிலாஹனா. (23)

சங்கையாகிய எங்கள்நாயகர் சல்லல்லாநபீ பொருட்டினால்
அங்கோராசெங்கோல் விர்த்திக்கச்செய்து ஆதரியா யிலாஹனா. (24)

ஆமினல்லாஹு அங்கோராசெங்கோல் அஹ்ஸனுக்கிட கெஞ்சலை
காமிலாஎந்தி டர்க்கிதௌலத்தைக் காத்துக்கொள்யா யிலாஹனா. ()

பிரஹ்மதிக யாஅற்அஹமற் ராஹிமீன் வல்ஹம்து
லில்லாஹி ரப்பில்ஆலமீன்.

இந்த முனாஜாத் சையதுனா அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு
தஆலா அன்ஹு அவர்கள் திருவாய்மலர்ந்
தோதினதாக இருக்கும்.

இந்த முனாஜாத் உலகமெங்கும் முஸ்லிமக்களில் பிரசித்திப் பெற்றதாயும் இதை ஓதி வருகிறதில் தீனுக்கும் துனியாவுக்கும் மிகுந்த பிரயோஜனமுண்டா யிருப்பதாலும் இந்த சங்கையான அறபீ முனாஜாத்துடன் அதின் இராகம்போலவே ஷை முனாஜாத்தின் கருத்துகளை யாபேர்களும் விளங்கி ஓதும்பொருட்டுச் சுட்டிக் காட்டினம்.

(கவனிப்பு) இந்த முனாஜாத்தின் அறபி வாசகங்களின் முதலில் இந்த { நகவளைவின் அடையாள மிட்டிருக்கிறது. இதைப் படிக்க விருப்பமுள்ளவர்கள் (அஹ்ஸனுல் முனாஜாத் விதப்இ குல்

லில் பலிய்யாத்) என்னும் அறபுத் தமிழ் றிஸாலாவில்) கண்டிருக்கும். அறபி வாசகத்தின் சப்தங்களை அறபிவாசகந் தெரிந்தோர்களால் விளங்கத் தெரிந்துகொண்டு படிப்பீர்களாக. அப்படி, அறபீ வாசக சப்தங்களை விளக்கிக்கொள்ள முடியாதவர்கள் ஷை அறபீ அபியாத்தின் கருத்துகளை தமிழில் சொல்லப்பட்டிருக்கும் அபியாத்துகளைப் படிப்பார்களாக :—

## (ஷை முனஜாத்)

{ஜுத்பிலுத்பிக யாயிலாஹீ மன்லஹுஸா துன்கலீல்
{முப்லிஸுன்பிஸ் ஸித்கிய அதீ இந்தபாபிக யாஜலீல்.

யாஇலாஹீ உனது * லுத்பால் எந்து * என்தோ ஷாகலீல்
காயிமென்ருன் $ வாயல்வந்த எழுமையைக்கார் * யாஜலீல் (1)

{ஸன்புஹுஸன் புன்அலீமுன் பக்பிரிஸ்ஸன்பல் அதீம்
{இன்னஹுஷக் ஸுன்கரீபுன் முத்னிபுன்அப் துன்ஸலீல்

அவனின்பாவம் மிகைத்ததாலே அதைபொறுத்துக் கொள்ளுவாய்
அவனேஎம்மை யானபாவீ யானஅடியானும் * ஸலீல். (2)

{மின்ஹுஇஸ்யா னுவ்வனிஸ்யா னுவ்வஸஹ்வுன் பஅதஸஹ்வ்
{மின்கஇஹ்ஸா னுவ்வபத்லுன் பஅதஇஅதா யில்ஜஸீல்.

மறதிக்கிபின் மறதியவனில் மாறுச்செயல்க ளாகுது
சிறந்தஉனது தீர்ச்சையில்லா உதவிகிருபை செய் † ஜஸீல் (3)

{காலயாறப் பீஸுனூபி மிதலறம்லின் லாதுஅத்
{பஅபுஅன்னீ குல்லஸன்பின் வஸ்பஹிஸ்ஸப் ஹல்ஜமீல்.

எனதுறப்பே குற்றமெனது எண்ணமுடியா மணலைபோல்
என்குற்றம்யாவும் பொறுத்துஎன்னை விடுவிக்கப்போதும்* ஜமீல்.(4)

{கைபஹாலீ யாஇலாஹீ லைஸலீகை றுல்அமல்
{ஸூஉஅமாலீ கதீறுன் ஸாதுதாஅ தீகலீல்.

நல்அமல்கள் இல்லையாஇ லாஹிஎன்ஹால் எப்படி
அல்லலான துற்செயல்கள் மிகுத ‡ மென்தோ ஷாகலீல். (5)

* லுத்பால், என்பது, கிருபையால்.
o என்தோஷா கலீல் என்பது, என்னுடைய கட்டுசாதம் கொஞ்சம்.
$ வாயல் என்பது, வாசற்படியில்.
$ யாஜலீல் என்பது, ஓ வலுப்ப மானவனே.
* ஸலீல் என்பது, தாழ்மை.
† ஜஸீல் என்பது, மிகுதம்.
* ஜமீல் என்பது, அழகு.
‡ என்தோஷா கலீல் என்பது, என்னுடைய கட்டுசாதம் கொஞ்சம்.

{ஆபினீமின் குல்லிதாஇன் வக்திஅன்னீ ஹாஜதீ
{இன்னலீகல் பன்தகீமன் அன்தமன்யஷ் பில்அலீல்

பிணிகளனைத்தும் அகற்றியெந்தன் நாட்டத்தைநிறை வேற்றிடு
பிணியாளன்கல்பை நீசந்தோஷம்செய்விப்போன்என் மனம்¶அலீல்.

{குல்லிநாரின் உப்றுதியா றப்பீபீஹக் கிகமா
{குல்துஹாயா ஞறுகூனீ அன்தபீஹக் கில்கலீல்.

நெருப்பைக்குளிரச் செய்யெனது ஹக்கிலேயா றப்பனு
நெருப்புக்குநீ உரைத்தபோல் * யா ஞறுகூனீ பற்கலீல். (7)

{அன்தஷாபீ அன்தகாபீ பீமுஹிம்மா தில்உமூர்
{அன்தறப்பீ அன்தஹஸ்பீ அன்தலீநிஅ மல்வகீல்.

எங்களெல்லா கஷ்டத்திலு மேற்றசுகம்தர வல்லவன்
சங்கையான றப்புநீயே எனக்குச்சரியான $ வகீல். (8)

{றப்பிஹப்லீ கன்ஸபத்லின் அன்தவஹ்ஹா புன்கரீம்
{அஅதினீமா பீதமீரி துல்லனீகை றத்தலீல்.

o நன்கொடையா ளன்னீவறிசை யானபுதயலே கொடைகொடு
என்மனதின் நாட்டம்போல கொடுத்துகாட்டு நல் † தலீல். (9)

{ஹப்லனுமுல் கன்கபீறன் னஜ்ஜினுமிம் மானகாபு
{றப்பனுஇத் அன்தகாதீ வல்முனுதி ஜப்றயீல்.

பெருப்பமான ராஜரீகங் கொடுத்துப்பயங்கரம் தீர்த்துவை
ஒருநேரத்தில்நீ காதீயாகி அழைத்திடுவோர் $ ஜப்றயீல் (10)

{ஐனமூசா ஐனஈசா ஐனயஹ்யா ஐனநூஹ்
{அன்தயாஸித் தீகுஆஸின் துப்இலல்மவ் லல்ஜலீல்.

எங்கெமூசா எங்கொஈசா எங்கெயஹ்யா எங்கெ நூஹ்
சங்கைதெளபா உடன்சித்தீகே மீளுன்னுய னவன் * ஜலீல். (11)

¶ அலீல் என்பது, நொம்பலம்.
* யாஞறுகூனீபற்கலீல் என்பது, ஓ நெருப்பே குளிர்ந்திடு என்னுடைய தோழர்பேரில்.
$ வகீல் என்பது † காரியகர்த்தன்.
o நன்கொடை என்பது, நல்லுதவி.
† தலீல் என்பது, அத்தாக்ஷி.
$ ஜப்ரயீல் என்பது, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்.
* ஜலீல் என்பது, வலுப்பம்.

பிறஹ்மதிக யா அற்ஹமற் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி
றப்பில் ஆலமீன்.

## முன்னோர்களா லியற்றப்பட்ட *முனஜாத்.

### தாலாட்டு இராகம்.

ஆதிப் பெரியோனே அனைத்தும் படைத்தவனே
நீதிப் பெரியோனே நித்தம் புகழ்வேனே. (1)

மக்கத்தி லேபிறந்து மதீனா செங்கோல் நபிமேல்
மிக்க சலவாத்தை மென்மேலுரைப்பேனே. (2)

அல்லாஹு யாஷாபீ யாகாபீ வல்லவனே
எல்லாப் பிணியகல நம்பினேன் றஹ்மானே. (3)

ஆதம் நபிசருகி கோதும்பைப் புசித்தவரை
ஏதொன்றுஞ் செய்யாம லெளிதாய்ப் பொருத்தாப்போல். (4)

மூசாவின் சத்துருவை கூசாமல் நீலாற்றில்
பேசாமல் முங்கவைத்து நபிக்கிடங் கொடுத்தாப்போல். (5)

யூசுப் நபியவர்க்கு மோசமொன்றும் வாராமல்
பாசமுள்ள கிணறுதனில் வாசமுடன் வைத்தாப்போல். (6)

வலிய நபீகலீலை மெலியநம்றூத் செய்தான்
கலியாண மதில்முடிய வலியாக நின்றதுபோல். (7)

---

* இந்த முனஜாத்தையும் அடுத்த நஅத்தும் முஅஜிஸாக்களையும் முன்னோர்கள்பாடி அச்சிட்டு வெளியிடாமல் எட்டுப்பிரதியில் இருந்தவைகளை பாடல்களியற்றிய நாயகர்கள் தமது பாடல்களை பலர் பலவிதமாக சொற்களையும் சீர்களையும் தம்மனம்போல் புறட்டிக்கிடந்தவைகளை அனந்தம் பேர்களின் வேண்டுகோளின்படிக்கு றஹ்மானுதவியால் (அஹ்ஸன்) எமது சிற்றறிவிற்கெட்டியவரையில் சொற்களையும் சீர்களையும் திருத்தி அச்சிட்டு வெளியிட்டனம் :—

வாகான நூறைறப்பா தூபானில் தற்காத்து
ஏகாந்த ஈசாவை யேந்திவானம் சேர்த்தாப்போல். (8)

பட்சமுற்று யூனுசுவை மச்சத்தின் வயிற்றுக்குள்ளே
ரட்சித்த றஹ்மானேயுன் பிச்சையினைக் காத்தருள்வாய். (9)

இப்படியா யனந்தம் நபிமாரை நல்லோரை
செப்பிடி வித்தைப்போல மிரட்டிக்காட்டி மீட்டுவைத்தாய். (10)

அப்படியா னவனே படிநூல் தெரிந்தவனே
இப்படி என்னை றப்பே சோதித்தால் தாங்கேனே. (11)

அக்கால மென்னையுன் சிற்ருதனில் காப்பாற்றி
இக்காலி லிந்த திகிலிடியைக் காட்டாதே. (12)

அன்னாள் அஉயானில் முன்னொளிவா என்னைவைத்து
இன்னாளி லுருக்கூட்டி மண்ணில்விழுத் தாட்டாதே. (13)

பஞ்சபூத மிந்தஉடல் பிஞ்சுபோகு மென்றறிவேன்
கெஞ்சுவது உன்னை றப்பா நெஞ்சுவினை நீக்கியருள். (14)

போகும் பிணிஎனக்கு வாகுகெட்டு வந்ததுவை
மாய்கையாய் விறட்டியதின் லாகையை விறட்டியருள். (15)

நெஞ்சிலெனக் கிப்போது துஞ்சுப்போர நோக்காட்டை
பஞ்சாப் பறக்கதைச்செய் கொஞ்சமும் நிறுத்தாதே. (16)

ஏறு மிறங்குங்கலே நேருதண்ணீர் கூறுகட்டு
மாறிமாறி யோடுதலால் இருசூருங் குணுங்குதல்லாஹ். (17)

சூருக் குணுங்காமல் மாரிடுக்கம் வாராமல்
காரல்நெஞ்சைச் சூழாமல் பாருலகில் காத்தருள்வாய். (18)

தொண்டைப் புகையுறதும் சுண்டிரும்பல் காண்கிறதும்
மண்டையில்நீர் கொள்கிறதும் தூராக்கு ரஹ்மானே. (19)

மூச்சுடன் புகைச்சலுமாய் பேச்சுக்கிட மில்லாமல்
மாச்சல் படுவதைநீ காச்சி விறட்டியருள். (20)

குத்திரும்பல் நோயாலே கட்டைக் குனுங்குதல்லாஹ்
பட்டைவிட்டுப் போவதுபோல் விட்டநோயை நீக்கியருள் (21)

நடக்கையில் நடுங்காமல் படுக்கையிற் குலேக்காமல்
இடுக்கையி விழுக்காமல் எப்போதுங் காத்தருள்வாய். (22)

நெஞ்சில் வுறைந்தகபம் நச்சுவிழ இப்போது
கெஞ்சுவது உன்னைறப்பா பிஞ்சுவிள செய்தருள்வாய். (23)

மருந்துப்பிணி நீக்குதென்றும் துரும்புகாய மாக்குதென்றும்
விருந்துப்பசி தீர்க்குதென்று மிறந்து மறியேனே. (24)

மூதேவி நப்சென்னதைக் காதவழி விட்டோட்டி
சீதேவி யாகிக்கொள்ள பாதைவிடு றஹ்மானே. (25)

செலவுக்கொன்று மில்லாமல் நலவையுடல் சாராமல்
இலவம்பஞ்சு போலமனம் கலங்கியுன்னைத் தேடுதல்லாஹ். (26)

எண்ணுது எண்ணுதல்லாஹ் என் மனங்கலங்குதல்லாஹ்
கண்ணுன நபீபொருட்டால் கலக்கந் தெளித்தருள்வாய். (27)

நெஞ்சு கலங்குதல்லாஹ் பஞ்சாட்சரம் பொங்குதல்லாஹ்
வஞ்சமில்லா றஹ்மானே பஞ்சத்தைத் தொலைத்தருள்வாய். (28)

பட்டக் கடன்முழுது மட்டத்தரை யாகும்படி
கட்டளைப் போலிறண மிட்டெனக்குத் தந்தருள்வாய். (29)

இந்தத் துன்பமெனக்கு வந்தவகை தெரியாதல்லாஹ்
சொந்த இனத்தினரை நிந்தனைகள் செய்திருப்பேன். (30)

ஈயை யடித்திருப்பே னெறும்பை மிதித்திருப்பேன்
வையகத்தின் பாவம்மிகு செய்யாமற் செய்திருப்பேன். (31)

இவ்வா ரனந்தபாவங் கவ்விஎன்னு லாண்டாலும்
செவ்வெண்ணைப் போலொன் சிபத் அவ்வி வளக்குதல்லாஹ் (32)

என்னிலுந் துனியாவில் வின்னத்தார் பலகோடி
உன்னையன்றி யொருவரையும் புண்ணியனுய்க் காணேனே. (33)

அணுவு மசைந்திடுமோ மனமு மிசைந்திடுமோ
உணவு மசைந்திடுமோ உன்னுதவி யல்லாமல். (34)

ஆபத் தணுகாமல் நோயற்றெனை யெப்போதும்
லாபத்துட னல்லாஹ்நீ சலாமத்தாய் வைத்தருள்வாய். (35)

ஆசையுள்ள நபிசுமெத்த காசுபணம் வேணுமென்னும்
பாசத்தில்விழாம லென்னை வாசத்துடன் வைத்தருள்வாய். (36)

என்டு றஹ்மானே உன்னிடமாய் பின்னுமிந்த
விண்ணப்பத்தைக் கூறுகிறேன் மன்னவனே அல்லாஹு. (37)

மவுத்து வருங்காலங் கவுத்தனிபுலீசன்
சவுத்து விறண்டோட மருத்துவந் தந்தருள்வாய். (38)

நாவில்கலிமா சுதாவில் முழங்கும்படி
ஹவ்வில் ஒடுங்கஉயிர் உன்னுதவி வேணுமல்லாஹ். (39)

வாங்குமுயிர் நேரமதில் ஒங்குமிஜு றயீலவர்
எங்கயெனைச் செய்யாமல் தாங்கவேணு மல்லாஹு (40)

வெண்ணெயில் மயிரதுபோ லென்னைவிட் டுயிர்வாங்க
விண்ணப்பஞ் செய்தேனென் மன்னவனே அல்லாஹு. (41)

உயிரேகும் நேரமதில் உன் திக்றை யல்லாஹு
நயமாக நாஞேத நல்லுதவி தந்தருள்வாய் (42)

மக்கள் மனிதரெல்லாந் துக்கமா மவ்வேளை
ஒக்கநான் கலங்காமல் தற்காத்து நீகொள்வாய் (43)

என்றைக்கிருந்தாலு மண்ணுக்கிரை யாவதுண்டு
அன்றைக்கு மென் அல்லாஹ்நீ அடிமையைக் காத்தருள்வாய். (44)

ஆமீன் பிறஹ்மதிக யாஅற்ஹமற் ராஹமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## நமது நபீநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் முஅஜிஸாக்களைப்பற்றி முன்னோர்கள் பாடிய அநத்து.

அஹதாகிய ஹக்கன்புறத்தா லமையு முஹம்மத்
வஹதத் தெனவே ஜோதியொளி வளருமுஹம்மத். (1)

மலக்கூத்து புறாஜானதிலே மாடப் புராவாய்
குலமாம்ஜபு றாத்தில்மயிலாய்க் கூவுமுஹம்மத். (2)

ஆலம்பதினெண் ணாயிரங்கண் ணடிகள் தனிலும்
சீலமுடன் சிறந்திலங்கும் செம்மல் முஹம்மத். (3)

ஆதம்தமக்கு மாலத்துக்கு மவ்வ லுதித்து
வேதநபிகள் பின்னிலையாய் விளங்கு முஹம்மத். (4)

ஷறபானமுற்ச லீனவர்கள் ஜபஹத்து வழியிலே
துருபாவெனநா ருயிருந்து துலங்கு முஹம்மத். (5)

திரளானகுபிர் குலமறுத்து தீன்பயி ரேற்றி
இருளகற்றி இசுலாம்விளக்கை யேற்று முஹம்மத். (6)

விஸ்தாரமாக ஒட்டகையா மீனுடன் பேசும்
கஸ்தூரிமணங் காதவழி கமழு முஹம்மத். (7)

நடக்கும்வழியில் காடுமலை நவிலும் சலாமும்
அடிபூவிலிலா மேகங்குடை யாளு முஹம்மத். (8)

ஒரு ஈத்தங்கனீ கோதும்பைநா லொன்றினிற் பாதீ
பரிவாஎண்ணைந் தையாயிரர்க்கும் பகிர்ந்த முஹம்மத். (9)

வெண்ஜுரத்தில்நதி இருளில்மதி விரலா லழைத்தோர்
நஞ்சிட்டகரி நாவில்கொடு நவிலு முஹம்மத். (10)

முன்காணுந்துலை பின்தெரியும் முஸ்த்தபா நபியாம்
வன்னெஞ்சனபூ ஜஹலைநிதம் வதைக்கு முஹம்மத். (11)

இரவில்மிஅ ருஜேகியே வானேழுங் கடந்து
இறையோ னருஷில் நஅலேனுடனேருமுஹம்மத். (12)

சதறன்றியே சமுகம்கரபா கௌசைனெனு முடுகி
ஊத்ராதமென உம்மத்தோர்க்கு உரைக்கு முஹம்மத். (13)

கடுந் தூரங்கன அஜபுகளுங் கண்டுதிரும்பி
படுத்தெழுந்தபிசா னுவெதுப்பம் பார்க்கு முஹம்மத். (14)

சலவாத்தும்சலா மும்மிக தறஜாத்தும் உமக்கே
நலமாயுகந் தீந்தான் சுபுஹான் நாளுமுஹம்மத். (15)

எளியோனின்மனம் எங்கிப்புகழ் இறக்கும்துஆவை
தெளிவாககபூ லாகும்வழியி லழைத்த முஹம்மத். (16)

வீணும்துனியா வலேயிற்சிக்கி வீணிவிராமல்
தீனும்ஷறஇன் வழியிலெமை யழைத்த முஹம்மத். (17)

வழியாம்வஹ்தா னியத்திலும் மஅறிபத்திலும்
நழுவாமல்யகீ னுகநிற்கச் செய்தமுஹம்மத். (18)

மஹ்ஷர்தனிலே கல்குகளு மயங்கு மவ்வேளை
இஹ்ஸானுடனே இறையிடமன் றூடு முஹம்மத். (19)

நப்ஸீநப்ஸீ என்றுபல நபிகளுங் கூவ
உபகாரமுட னும்மத்தேஎன் றோதுமுஹம்மத். (20)

வல்லயமளவில் நின்றுகதிர் வாட்டுமவ் வேளை
அல்ஹம்துகொடி நிழலிலெமை யழைக்கு முஹம்மத். (21)

மீஜானில்நிறை பாலமுறை வேதனையெல்லாம்
ஆசான்செய்ய ஹக்கனைமன் றூடுமுஹம்மத். (22)

வாறெழுதிய பட்டோலையெமது வலக்கரந் தனிலே
நேரேபெருகும் வழிவிலெமை யழைத்த முஹம்மத். (23)

துகையாமெமது ஐபுகளுந் துன்பங்கள் தீர
வணக்யாக றப்பை கெஞ்சிக்கேட்கும் வண்மைமுஹம்மத். (24)

ஆமீன் பிறஹ்மதிக யாஅற்ஹமற்ராஹிமீன் வல் ஹம்து லில்லாஹி
றப்பில் ஆலமீன்

அஹ்ஸனுல், முனாஜாத், லிதப்இ, குல்லில்பலிய்யாத்
முற்றுப்பெற்றது.

121072

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.

இந்த நூதனமான முனாஜாத்தில் பொதிந்த விஷயங்கள், இக் கிதாபின் முகவுரையிற் பார்க்க நன்குவிளங்கும்.

இதின் விலை அணா **4**. வி. பி. யில் அணா **7**.

அரபுத் தமிழ் அணா **6**. வி. பி. யில் அணா **9**.

ஒரு ஆர்டரில் 10 கிதாபு தருவித்தால், கிதாபு 1-க்கு ஒரு அணா மட்டும்தான் வி. பி. செலவு ஏற்படும்.

அதாவது—

தமிழ் கிதாபு 10-க்கு வி. பி. யுள்பட ரூ. **3—2—0**.

அரபுத் தமிழ் 10-க்கு வி. பி. யுள்பட ரூ. **4—6—0**.

---

# புஷா ருத்தில் மூமினீன்
## (ம அ.)
# தன்பீஹுல் ஜாஹிலீன்.

இகுவான்களே! புதிய கோர்வை இதில் மார்க்கத்தைப்பற்றுமல் மூர்க்கத்தைப்பற்றும் முஸ்லிம் சகோதரர்கள், சகோதரிகளுக்கு அநேக நற்போதனைகளும், நல்லோர் நடக்கைகளும், கொடிகூடு பஞ்சாவைக் கொண்டாடும் கொடியோர்களுக்கு தன் பீஹ்களும் பிபி ருபிஅ ப்ஸிரி யவர்கள் வணக்கமும், நாட்டமும், கவலையும், முஹர்ற மாதத்தின் வரிசைகளும், ஹுஸைன் றலியல்லாஹு ஷஹிதாக காரணமும், முஹர்றமில் கண்மூடிகள் செய்கின்ற கோலங்களையும் இன்னுமனேக விஷயங்களையும் படிப்பவர் கேட்பவர்மனதில் பதியும் வண்ணமாகவும், பாடல்களாக பொதிந்துள்ளது.

தமிழ் கிதாபு 1-க்கு அணா **0—12—0**. வி. பி. யில் ரூ. **1—0—0**.

அரபுத் தமிழ் கிதாபு 1-க்கு ரூ. **1—0—0**. வி. பி. யில் ரூ. **1—4—0**.

விருப்ப முள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

வாயிஜ். மா. அ. புக்டிபோ,
மேல்விஷாரம் போஸ்டு, (நார்த்தாற்காடு).